செ.வெ.எண்:44 நாள்:26.07.2021

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் TEDA - RESCO திட்டத்தின் கீழ் 60 கிலோ வாட் கொண்ட சூரிய மின்சக்தி சாதனத்தை மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் TEDA - RESCO திட்டத்தின் கீழ் 60 கிலோ வாட் கொண்ட சூரிய மின்சக்தி சாதனத்தை மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை(TEDA– RESCO) திட்டத்தின் அடிப்படையில் இன்று (26.07.2021) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ரூ.31.00 இலட்சம் மதிப்பிலான 60 கிலோ வாட் கொண்ட சூரிய மின்சக்தி சாதனத்தை மாவட்ட ஆட்சியர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த சூரிய மின்சக்தி அமைப்பின் மூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அனைத்து மின்சாதனங்களும் இயங்குவது மட்டுமல்லாமல் மீதமுள்ள மின்சாரமானது மின்வாரியத்திற்கு அனுப்பி சேமிக்கப்படுகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டினை அதிகப்படுத்தவும் மரபுசாரா எரிசக்தி பயன்பாடுகள் குறிப்பாக சூரிய மின்சக்தியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் சாதனங்களை (Grid Connected Roof Top Solar System) மாவட்டத்தில் உள்ள அரசு கட்டிடங்களில் TEDA – RESCO திட்டத்தின் மூலம் சூரிய மின்சக்தி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மூலம் மரபுசாரா எரிசக்தியினை மேம்படுத்தும் திட்டங்கள் மாவட்டம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே இந்த சூரிய சக்தி அமைப்பினை ஏற்படுத்தும் அரசு அலுவலங்களில் மின்சாரமானது சேமிக்கப்படுவதோடு மின்வாரிய கட்டனமானது குறைகிறது. இத்திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 60 KW, மாவட்ட ஊரக வளர்ச்சி அலுவலகத்தில் 40 KW , தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழத்தில் 90 KW வாட் மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 20 KW வாட், குத்தாலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 12 KW வாட் மற்றும் செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 15 KW வாட் ஆகிய அலுவலங்களில் முன்மாதிரியாக இத்திட்டம் செயல்பட்டுவருகிறது என மாவட்டழ ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. குணசேகரன் அவர்கள், நாகப்பட்டினம் மாவட்ட TEDA உதவி பொறியாளர் திரு. ஆர். ராஜராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**